*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*04 11 2025 TUESDAY 12 40 PM*
*வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. தமிழகம் உட்பட 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன்பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் இன்று தொடங்கின.

2. பிஹார் சட்டப்பேரவைக்கு முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள 121 தொகுதிகளில் தலைவர்கள் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

3. நீலகிரி நாடாளுமன்ற தொகுதியில் நடத்தப்படும் Sansad விளையாட்டு திருவிழாவில் இளையோர் அதிக அளவில் பங்கேற்குமாறு மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. டொமினிக்கன் குடியரசின் சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இந்தியா 2 லட்சத்து 50 ஆயிரம் டாலர் நிதியுதவி வழங்க முடிவு செய்துள்ளது.

5. ஆசிய Climbing சாம்பியன் போட்டியில், இந்தியா 2 தங்கம், 3 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<

தமிழகம் உட்பட 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன்பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் இன்று தொடங்கின.

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக சென்று இந்தப் பணியை மேற்கொண்டு வருவதாக மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. இளம் பகவத் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – இளம்பகவத் 41 செகண்ட்ஸ்)

இந்த கணக்கெடுப்பு டிசம்பர் 4-ஆம் தேதி வரை மேற்கொள்ளப்படும். வரைவு வாக்காளர் பட்டியல் டிசம்பர் 9 ஆம் தேதி வெளியிடப்படும்.

*பணிகள் முழுமையாக முடிவடைந்து அடுத்த ஆண்டு பிப்ரவரி 7-ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.*

*>>>>><<<<<*

*பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள 121 தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் இன்று மாலை 5 மணியுடன் நிறைவடைகிறது.*

*இத்தொகுதிகளில் பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா, அக்கட்சியின் மூத்த தலைவர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு. அமித் ஷா ஆகியோர் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.*

*எதிர்க்கட்சிக் கூட்டணியின் சார்பில் திரு. ராகுல் காந்தி. திரு. தேஜஸ்வி யாதவ், திரு. அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோரும் இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.*

*இந்த தொகுதிகளில் நாளை மறுநாள் நடைபெறவுள்ள வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.*

*பதற்றம் நிறைந்த வாக்குச்சாவடிகள் என கண்டறியப்பட்ட இடங்களில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*கத்தாரில் நடைபெறும் சமுதாய வளர்ச்சிக்கான இரண்டாவது உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தோஹா சென்றுள்ளார்.*

இன்று தொடங்கி நாளை மறுநாள்வரை நடைபெறும் இந்த மாநாட்டின் தொடக்க அமர்வில் பங்கேற்கும் அவர், தோஹா பிரகடனத்தை வெளியிடும் நிகழ்ச்சியிலும் கலந்து கொள்கிறார்.

வறுமை ஒழிப்பு மற்றும் வேலைவாய்ப்பு குறித்த வட்டமேஜை நிகழ்ச்சியிலும் திரு. மன்சுக் மாண்டவியா பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

>>>>><<<<<

மத்திய வர்த்தகத்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா, *Romania* வர்த்தக அமைச்சர் திருமதி. *Oana - Silvia Toiu*-வுடன் இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து பேச்சு நடத்தினார்.

*Bucharest*-ல் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, இருதரப்பு வர்த்தகத்தை அதிகரிப்பதுடன், முதலீடுகளை ஈர்ப்பது குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை இருதரப்புக்கும் பயனளிக்கும் வகையில் இறுதி செய்ய, இருநாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நீலகிரி நாடாளுமன்ற தொகுதியில் நடத்தப்படும் *Sansad* விளையாட்டு திருவிழாவில் இளையோர் அதிக அளவில் பங்கேற்குமாறு மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பிரதமரின் வழிகாட்டுதலின்படி, நாடாளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பில், நாடுமுழுவதும் இந்தப் போட்டி நடத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இளையோரின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் விதமாகவும், இதில் வெற்றி பெறுவோரை தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளுக்கு தேர்வு செய்யும் வகையிலும் இந்தப் போட்டி நடத்தப்படுவதாக டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

>>>>><<<<<

ராணுவத்தின் ஆயத்த நிலை குறித்து, ராணுவ தளபதி ஜென்ரல் Upendra Dwivedi, ஹரியானா மாநிலம் அம்பாலாவில் உள்ள Kharga Corps படைப்பிரிவில் ஆய்வு நடத்தினார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, இந்தப் படைப்பிரிவினரின் செயல்பாட்டிற்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

நாட்டிற்காக வீரர்கள் அர்ப்பணிப்பு, மனஉறுதி மற்றும் துணிச்சலுடன் பணியாற்றி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடு எதிர்நோக்கும் சவால்களை திறம்பட எதிர்கொள்ள ஏதுவாக, முப்படைகளும், அரசின் பல்வேறு துறையினரும் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம் என்றும் ஜென்ரல் Upendra Dwivedi வலியுறுத்தினார்.

>>>>><<<<<

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, உத்ராகண்ட் மாநிலம், நைனிடாலில் உள்ள Kumaon பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்து கொண்டார்.

இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பை முடித்த மாணவர்களுக்கு அவர் பட்டங்களை வழங்கினார்.

முன்னதாக, நைனிடாலில் உள்ள மாதா நைனாதேவி ஆலயத்தில் குடியரசுத்தலைவர் வழிபாடு செய்தார்.

>>>>><<<<<

டொமினிக்கன் குடியரசின் சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இந்தியா 2 லட்சத்து 50 ஆயிரம் டாலர் நிதியுதவி வழங்க முடிவு செய்துள்ளது.

அந்நாட்டின் Roseau நகரில் டொமினிக்காவிற்கான இந்திய தூதர் திரு. Pradeep Rajpurohit அந்நாட்டு வெளியுறவு மற்றும் வர்த்தக அமைச்சர் திரு. Vince Henderson-சுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் முடிவில் இதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் விளையாட்டு வளாகங்கள் அமைப்பதற்காக இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

பங்களாதேஷில் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலை சீர்குலைக்க, இடைக்கால அதிபர் திரு. Muhammad Yunus தலைமையிலான அரசின் ஒரு தரப்பினர் முயற்சிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

டாக்காவில் செய்தியாளர்களிடம் பேசிய தேசிய மக்கள் கட்சியின் நிர்வாகி திரு. அக்தர் உசேன், ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட சில அம்சங்கள் தொடர்பான கருத்து வாக்கெடுப்பை நடத்தும் பொறுப்பை அரசியல் கட்சிகளிடம் விடுவது என்ற அரசின் முடிவை குறைகூறியுள்ளார்.

இது, சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கான தந்திரம் என்றும் திரு. அக்தர் உசேன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

உலகில் அமைதியை நிலைநாட்ட இந்தியா-அமெரிக்கா இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது அவசியம் என்று குடியரசுக் கட்சியை சேர்ந்த அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ரிச் மெக்கார்மிக் தெரிவித்துள்ளார்.

*Washington* -ல் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அதிபர் திரு. டொனால்டு டிரம்ப் தலைமையிலான அரசு இந்தியா போன்ற நாடுகளுடனான நட்புறவை சீராக பராமரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்தியாவுக்கு எதிரான கூடுதல் வரிவிதிப்பு விவகாரத்தில் அமெரிக்கா கவனமாக இருக்க வேண்டும் என்றும் அவர் டிரம்ப் நிர்வாகத்தை கேட்டுக் கொண்டார்.

நிலவின் தென் பகுதியில் சந்திரயான் விண்கலத்தை வெற்றிகரமாக தரையிறக்கிய உலகின் முதல் நாடாக இந்தியா திகழ்வதற்கும் திரு. ரிச் மெக்கார்மிக் பாராட்டு தெரிவித்தார்.

>>>>><<<<<

மத்திய வர்த்தக அமைச்சகத்திற்கு உட்பட்ட வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம். கோஸ்ட்டாரிக்காவிற்கு 12 மெட்ரிக் டன் விதைநெல்லை ஏற்றுமதி செய்துள்ளது.

சத்திஷ்கட் மாநிலத்திலிருந்து இந்த நெல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

*இந்த நடவடிக்கை, அம்மாநில விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்கள், சர்வதேச சந்தையில் வர்த்தகம் மேற்கொள்ள உதவிகரமாக இருக்கும் என்றும் மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*அந்தமான் நிகோபார் தீவுகளில் இன்று இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*ஆந்திரா, ஹிமாச்சலப்பிரதேசம், ஜம்மு கஷ்மீர் மற்றும் லடாக்கின் ஒரு சில பகுதிகளிலும் இன்று மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.*

*தமிழகம், புதுச்சேரி, காரைக்கால், தெலங்கானா மற்றும் உத்ராகண்டின் ஒரு சில பகுதிகளிலும் இன்று மழை பெய்யும் என்று தெரிவித்துள்ள வானிலை ஆய்வு மையம், தலைநகர் தில்லியில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் கூறியுள்ளது.*

*>>>>><<<<<*

*ஆசிய Climbing சாம்பியன் போட்டியில், இந்தியா 2 தங்கம், 3 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.*

*மஹாராஷ்ட்ராவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 13 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில் Akash Soren-ம், மகளிர் பிரிவில் Dhruvi Ganesh Padwal-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.*

*சங்கர் சிங் இரண்டு வெள்ளிப்பதக்கங்களையும் மனிஷா ஒரு வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.*

***ஆடவர் பிரிவில் Mora வெண்கலப்பதக்கம் வென்றார்.***

***>>>>><<<<<***

***கோவாவில் நடைபெற்று வரும் உலக கோப்பை செஸ் போட்டியில், இந்தியாவின் S. Narayanan மற்றும் Diptyan Ghosh முதல் சுற்றில் வெற்றி பெற்றனர்.***

***>>>>><<<<<***